DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 81/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.7 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில் (எ) செந்தில்குமார் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சின்னசாமி | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.11.2025.

**முதல் விசாரணை**

நான் உடுமலைப்பேட்டை பத்ரகாளியம்மன் லேஅவுட்டில் வசித்து வருகிறேன். மேசன் வேலை செய்து வருகிறேன். சித்த கோட்டையில் வெற்றி வேல் நகரில் எனக்கு சொந்தமாக வீடு உள்ளது. பத்ரகாளியம்மன் லே அவுட்டில் உள்ள வீடு வாடகைக்கு புரோக்கர் மூலமாக வீடு வாடகைக்கு விட்டேன். யாருக்கு விட்டேன் என்று தெரியாது. 2 நாட்கள் தான் குடியிருந்தார்கள் போலிசார் அங்கு அடிதடி வழக்கு நடந்ததாக கூறினார்கள். எங்கள் வீட்டில் குடியிருந்து வந்தவர்களை பிரசிடண்ட் மற்றும் இன்ஸ்பெக்டர் வந்து காலி செய்து விட்டதாக சொன்னார்கள். காலி செய்து போது நான் அங்கு சென்று விட்டேன்.ஆஜர் எதிரிகள் அங்கு குடியிருந்தார்கள். வழக்கு பற்றி தெரியாது. தற்போது இங்கு வந்து தான் தெரியும்.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2021 ம் வருடம் எனக்கு தெரிந்த புரோக்கர் மூலமாக அறிமுகடம ஆன ஆஜர எதிரிகள் இருவரும் தங்களை கணவன் மனைவி என்றுநம்ப வைத்து எனக்கு சொந்தமான வீட்டை வாடகைக்கு கொடுத்தேன் என்றும், 10 நாட்களில் எனது வீட்டில் வைத்து ஆஜர் எதிரிகள் இருவரும் பெண்களை வைத்து விபச்சாரம் செய்தவாகவும் கையும் களவுமாக பிடித்து விட்டதாகவும், போலிசார் கூறியதன் பேரில் எனக்கு தெரிந்தது என்றும், கணவன் மனைவி என்று சொன்னதால் நம்பி வாடகைக்கு விட்டதாகவும், விபச்சார தொழில் செய்பவர்கள் என்றால் குடியிருக்க வைத்திருக்க மாட்டேன் என்றும் இனி வரும் காலத்தில் நன்கு விசாரித்து அதற்கு பின் தான் வாடகைக்கு விடுவேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது புரோக்கர் ஒருவர் தான் என்னிடம் வீடு கேட்டார் என்றும், அந்த வீட்டில் அடிதடி வழக்கு நடந்தது என்றும் விபச்சாரம் நடந்ததை மறைத்து ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கில் ஆஜர்எதிரிகளிடம் அட்வான்ஸ் வாங்கவில்லை என்றால் சரிதான். இன்று வந்து போலிசார் சொன்னதற்கு பின்னிட்டு தான் விபச்சாரம் நடந்தது தெரியும் என்றாலும் தற்போது போலிசார் அடையாளம் காட்டியதன் பின் தான் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றாலும் சரிதான். பக்கத்து வீட்டுகாரர் உடன் அடிதடி பிரச்சனை என்று இந்த வழக்குபோட்டார்கள் என்றால் அடிதடி பிரச்சனை ஆகி நான் சென்றிருந்ததேன். போலிசார் அப்போது அங்கு வந்து தப்பானவர்களாக இருக்கிறார்கள் என்று கூறி அவர்களை காலி செய்ய வைத்தார்கள்.

**<u>2 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை தழுவி கொள்வதாக தெரிவித்தார்.</u>**

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.